## திரஜ்லால் A காந்தி அவர்களைப் பற்றிய அறிமுகம்

19 ஆம் நூற்றண்டின் துவக்கத்தில் குஜராத் மாநிலத்தை சேர்ந்த ஒரு மூதாட்டி, தமிழகத்தின் திருப்பூர் அருகே ஒரு சிறிய கிராமத்தில் குடியேறினார். **35** பேர் கொண்ட அவரின் கூட்டு குடும்பத்தில் கல்வி கற்றவர் யாருமில்லை. அவரின் மகன் வயிற்றுப்பேரன் எந்த வசதியும் இல்லாத அந்த குடும்பத்திலிருந்து படிப்பு ஒன்றையே மூச்சாக எண்ணி பள்ளிக்கு சென்ற போது அணிவதற்கு சீருடை கூட சொந்தமாக இல்லை.

காலில் செருப்பு கூட இல்லாமல் இரவல் சீருடையில் பள்ளிப் படிப்பை முடித்த அந்த சின்னஞ்சிறு பிள்ளையின் கனவு பொறியியல் படிப்பாக இருந்தது.

கல்லூரி மாணவராக கோவை **PSG** பொறியியல் கல்லூரியில் சேர்ந்த பொழுது சுற்றியிருந்தவர்களின் பகட்டு அவரை மிரள வைத்தது. ஆனால் அவரின் முதல் பருவத்தேர்வு முடிவுகள் வெளியானபோது அத்தனை பேரும் அவரைப் பார்த்து ஆச்சரியத்தில் மிரண்டு போனார்கள். ஆம் **அந்தத் தேர்வில் அவர்தான் முதல் ரேங்க் மாணவர்**

படித்து முடித்தபின் குந்தா பவர்ஹவுஸில் பென்ஸ்டாக் எரெக்ஷன் பணியில் வேலைக்கு சேர்ந்த அவரை **PSG** கல்லூரி நிர்வாகம் அவர் படித்த அதே கல்லூரியில் அவரை பேராசிரியராக நியமனம் செய்தது. ஆனால் ஒரு சில மாதங்களில் அப்போது சேலத்தில் புதியதாக துவங்கப்பட்ட ஒரு பாலிடெக்னிக் கல்லூரியில் கட்டிடவியல் துறைத்தலைவராக தன்னை இணைத்துக்கொண்டார்.

**தனது 27வது வயதில் அந்த கல்லூரி முதல்வர் ஆனார் தமிழகத்தின் இளையவயது கல்லூரி முதல்வர் இவரே இது கதையல்ல நிஜம்**

**தமிழகத்தின் இல்லையில்லை உலக அளவில் பெயர்பெற்ற தியாகராஜர் பாலிடெக்னிக்கை உருவாக்கிய இவர் 35 ஆண்டுகள் தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வராக பணிபுரிந்த நமது பெருமைக்குரிய பிதாமகர்** .திரஜ்லால் **A** காந்தி அவர்கள் என்பதைக் கூறிக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறோம்

**1986** ஆம் ஆண்டு சிறிய அளவில் இவர் துவங்கிய முகேஷ் அண்ட் அஸோஸியேட்ஸ் இன்று திரஜ்லால் காந்தி காலேஜ் ஆப் டெக்னாலஜியின் வைஸ் சேர்மன் திரு மனோஜ்குமார் அவர்கள் தலைமையில் பல உலகநாடுகளில் கட்டிடவியல் துறையில் கால் பதித்துதுள்ளது .

தியாகராஜர் பாலிடெனிக்கை தொடர்ந்து **16** ஆண்டுகள் சோனா கல்லூரியின் அஸ்திவாரம் முதல் ஒவ்வொரு அங்குலத்தையும் உருவாக்கினார்.

இந்த தருணத்தில் தான் கிராமப்புற மற்றும் ஏழை எளிய மாணவ மாணவிகளுக்காக குறைந்த செலவில் பொறியியல் படிப்பு கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் **2011** ஆம் ஆண்டில் **45** மாணவ மாணவிகளுடன் இவர் துவங்கிய திரஜ்லால் காந்தி காலேஜ் ஆப் டெக்னாலஜி இன்று ஆண்டுக்கு **2000** மாணவ மாணவிகள் படிக்கும் தரமான பொறியியல் கல்லூரியாக வளர்ந்து விட்டது.

**நீ போகலாம் என்பவன் எஜமான் வா போகலாம் என்பவன் தலைவன்** என்றுமே தலைவனாக இருந்து லட்சோப லட்ச மாணவ மாணவிகளை உருவாக்கிய எங்கள் பெருமைமிகு பிதாமகர்
திரு. திரஜ்லால் **A** காந்தி அவர்களை சிரம் தாழ்த்தி கரம் கூப்பி வணங்குகிறோம்.